# பயணத்திலே

நான் நண்பரின் வேண்டுகோளுக்கு இணங்கினேன். அவருடைய இருபது வயதுப் பெண் பாமாவையும், பன்னிரண்டு வயதுப் பையன் ராஜுவையும், ஐந்து வயதுச் சிறுவன் சேகரரையும் மதுரையில் சேர்க்கும் பொறுப்பு ஏற்றேன்.

ரயிலடிக்கு வந்து சேரும் சமயம் ராஜு "ஐயோ மறந்தே விட்டேனே! ரயிலில் படிக்க புத்தகம் எடுத்து வைத்தேன் – பையில் வைக்கவில்லை" என்று துடித்தான்.

ரயிலடிப் புத்தகச் சாலையில் புத்தகத்தை வாங்கித் தந்தேன். என் புத்திமதியை ரயிலில் கூறலாம் என்று ஒத்திப் போட்டுவிட்டு; என்னைச் சுற்றிலும் கண்ணோட்டினேன். பாமாவின் மகன் சேகரைக் கவனித்தேன். ஹோல்டாலில் ஒட்டியிருந்த பெயர்ச்சீட்டைப் பிய்த்தான் – சுருட்டினான் – சுருட்டுப் பிடிக்கத் தொடங்கினான் பயல்! பையனின் சேஷ்டையை சற்று எட்டி நின்ற ஒரு ஆங்கிலோ – இந்தியக் கிழவி கவனித்தாள். "சுட்டிப் பயல்... சுருட்டுப் பிடிக்கிற பாவனையைப் பாரேன்!" என எண்ணுபவளாகி, அவள் புருவங்களை நெறித்து, கண்களை விரித்து, கீழ் உதட்டை வளைத்து, தலையைப் பன்முறை ஆட்டினாள்.

வண்டி வந்தபிறகு இடம் பார்த்து அமர்ந்தோம்.

"என்ன மாமா - எதை ரசிக்கிறீர்கள்?" என்று கிண்டலாகக் கேட்டான் ராஜு. நான் துவங்கிவிட்டேன்.

"வெளியே கிளம்பிவிட்டால், கொஞ்சம் கவனித்தால் எத்தனை விஷயங்கள் தெரிகின்றன! நீ புத்தப் புழுவாய் இருக்கிறாயே. ஒரு தடவை ரயிலில் போய்க்கொண்டிருந்தேன் - சூட்டும் பூட்டும் ஹாட்டுமாக ஒருவன் சிகரெட் ஒன்றை வாயில் வைத்துக் கொண்டு தீக்குச்சியைக் கிழித்தான் உடனே எதிர் பெஞ்சியிலிருந்த ஒரு உச்சிக் குடுமிக்காரர், "எனக்கும் இப்படி....." என்றார். சிகரெட் குடிப்பவர்கள் காப்பி குடிப்பவர்கள், கள் குடிக்காரர்கள் எல்லோரும் பிறத்தியாரும் தங்களைப்போல இருக்கிறார்கள் என்று சந்தோஷப்படுவார்கள் - அப்படியில்லாதவர்களை, "பாருங்கள் - அனுபவியுங்கள் ஜோராயிருக்கும்!" என்று உந்துவார்கள் - கவனித்துப்பார்! இந்த ஹாட்டுக்காரனும் ரொம்ப உற்சாகமாய், எரியும் தீக்குச்சியை தீட்டினான்! குடுமிக்காரர் அதிலே பற்ற வைத்த வஸ்துவைப் பார்த்தார்! பிரமித்துப் போய்விட்டார்! "ஐ ஆம் ஸாரி" என்று சொல்லிவிட்டு, தன் முழு சிகரெட்டை, வெளியே வீசி எறிந்துவிட்டார். குடுமிக்காரர் என்ன பற்ற வைத்தார் - சொல்ல முடியுமா?"

ராஜுவும் பாமாவும், "ஊதுவத்தி!" என்ற என் பதிலைக்கேட்டு திகைத்துவிட்டு மறுகணம் முகமலர்ந்தார்கள்!

"குடுமிக்காரரைப் பார்க்கணும் போல ஆசையாயிருக்கு!" என்று கண் சிமிட்டிச் சிரித்தான் ராஜு.

"குடுமிக்காரர்களைக் கேலி பண்ணாதே! அவருடைய மூளை எப்படி வேலை செய்திருக்கு - என்ன துணிச்சலாய் நடந்து கொண்டார் பார்!" என்றேன் நான்.

"குடுமி வைச்சுக்கவே முதலில் ரொம்ப துணிச்சல் வேணுமே!" என்று என்னை மடக்கிவிட்டான் ராஜு.

"ஆம், நிஜந்தான் - ஆனால், அவருடைய துணிச்சல் என்ன நாசூக்கு - என்ன நிதானம்! அவரைப் பார்த்தப் பிறகாவது எனக்கு கையொடு ஊதுவத்திக் கட்டு எடுத்துக்கொண்டு போய், சிகரெட் நாற்றத்திற்கு மாற்று செய்து கொள்ள தைரியமுண்டா? இல்லை. ஆனால், ஒரே ஒரு தடவை சிறிது தைரியமாய் நடந்து கொண்டிருக்கிறேன். பக்கத்திலிருந்த ஒருவர், "புகை பிடிக்கலாமா நான்?" என்று என்னை அனுமதி கேட்டார். "தாராளமாய் - நீங்கள் புகை பிடித்து அனுபவியுங்கள் - மூக்கைவிட்டோ, வாயை விட்டோ கொஞ்சங்கூட புகையை வெளிவிடாமல் நீங்களே அத்தனை புகையையும் உறிஞ்சிக் கொள்வீர்களானால்,

எனக்கு ஆக்ஷேபனை என்ன?" என்று சொன்னேன் - அவர் சிகரெட் பற்றவைக்கவில்லை! வாயிலே போன ஜலம் வெளியில் வந்தால் எச்சில் - அப்படித்தானே அவன் வாயிலும் தொண்டையிலும் சுழன்ற புகையும் எச்சில்? அனுமதி கேட்டால் மட்டும் ஒப்புக்கொள்வதா எச்சில் புகைவிழ? குடுமிக்காரரை மனதில் நினைத்துக்கொண்டு இதைச் சொல்லிவிட்டேன் தைரியமாய்!"

"பலே பலே!... மாமா!" இது ராஜுவின் பாராட்டு! "நாலு தினுசு மனுஷர்களைக் கவனிப்பது நல்லது என்று தெரிகிறதா? இன்னொரு சமயம் - ஒன்றரை மணி நேரம் ஒரு வடக்கத்தி முண்டாசுக்காரனோடு பயணம் வாய்த்தது - கோட்டின் வலது பையிலிருந்து பீடா எடுப்பான்; மெல்லுவான் - அது முடிந்ததும், இரண்டு நிமிஷங்க கழித்து இடது பையிலிருந்து பீடி எடுப்பான் - புகைப்பான் - அப்புறம் மூன்று நிமிஷம் - பீடா - அப்புறம் இரண்டு நிமிஷம் - பீடி... இப்படியே பீடாவும் பீடியும் மாறி மாறி எடுத்தான் ! என்ன பீடை வழக்கம் - கண்றாவி! முதலில் நான் நிமிஷக் கணக்குப் பார்க்கவில்லை - அப்புறம் சந்தேகம் வந்து கவனித்தேன் - எத்தனை வருஷப் பழக்கமோ, கடியாரம் மாதிரியே அவன் கையும் வாயும் வேலை செய்தன! எனக்கு ஒன்றரைமணி நேரமும் அவனை கவனிக்கவே சரியாய் இருந்தது.

"பலவித ஜனங்கள் - வழக்கங்கள்! இன்னொரு தடவை ஒரு தொண்டு கிழவர், ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் தின்பண்டம் வாங்கித் தின்றார். நொங்கு, கடலைச் சுண்டல் முதற்கொண்டு ரயில்வே ரெஸ்டாரெண்டிலிருந்து ஒருசெட் ரொட்டி வெண்ணெய் வரை சகலமும் வாங்கினார்! மாம்பழம் ஒரே உறிஞ்சிலே காலி! அத்தனை ஆவலும் அவசரமுமாய்த் தின்றார்! உடம்பெல்லாம் சுருக்கம் - கை நடுக்கம்... ஆனால் அவருடைய தீனி வெறி!... பெண்டாட்டி பத்தியம் கித்தியம் என்று ஆயிரம் பாடு படுவளோ என்னமோ இவருக்காக - இவரானால் இப்படி மொசுக்குகிறார் ரயிலில்! காலை எட்டு மணி முதல் இரவு பத்துமணிவரை அவர் வாங்கின பண்டம் கணக்கு வழக்கு இல்லை!"

ராஜு இடைமறித்து, "உங்களுக்கு ஒன்றுமே தரவில்லையா மாமா?" என்று வினவினான்.

"தந்தால் கையாலே தொட்டிருப்பேனா? அவர் எச்சில் கையை அலம்பினால்தானே" என்றேன்.

ஒரு சம்பவம் நினைவிற்கு வந்தது. ஆரம்பித்தேன். "ஒரு முறை கல்கத்தாபோக செண்டிரல் ஸ்டேஷனில் காத்திருந்தேன். பிளாட்பாரத்திலே, வாட்ட சாட்டமான ஒரு மனிதர் என்னுடன் சிறிது பேச்சுக்கொடுத்துவிட்டுப் போனார். வண்டி வந்தபிறகு நான் ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியில் இடம் பிடித்து ஏறி உட்கார்ந்தேன். அப்பொழுது புது சிநேகிதர் வந்து சேர்ந்தார் - "ஜோரான இடம், நான் ஏற்பாடு செய்திருக்கிறேன், வாருங்கள்" என்றார். "கிடைத்திருக்கும் இடமே சௌகரியமாயிருக்கிறதே!" என நான் எத்தனை கூறியும் அவர் விடவில்லை "மிலிடெரிக்கு என ஒதுக்கியிருக்கும் பெட்டி, சார்! என் உறவுப் பையன் மூலம் எனக்கு அதிலே இடம் கிடைத்தது. இன்னும் ஒருவர் இருக்கிறார் என்னுடன் என்று சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறேன்! கிளம்புங்கள்," என்றார். போனேன் அவர் சொன்னது சரி. அது ராணுவ வீரர்களுக்கு ஒதுக்கப்பட்ட பெட்டி. யார் ஏற வந்தாலும் உள்ளேயிருப்பவர்களின் அனுமதி தேவை. பல பேர் உள்ளே தலை நீட்டினார்கள். ராணுவ உடை அணிந்த வீரர்களையும் முந்திக்கொண்டு என் புது நண்பர் அவர்களை விரட்டினார்! என்னை மட்டும் அவர் வலுவில் அழைத்து உபசரித்ததற்கு நான் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். இரவு கொஞ்சமும் கலையாத தூக்கம் தூங்கினோம் எல்லோரும்.

மறுநாள் காலையில் விஜயவாடாவில், என்னைக் காப்பி சாப்பிட அழைத்தார். வழக்கமில்லை என மறுத்துவிட்டேன். அவர் போகத் தயாரானார். "யாரையும் விடாதீர்கள் உள்ளே, திமுதிமுவென ஏறுவான்கள்!" என்று அருகிலிருந்த இரு வீரர்களிடம் கூறிவிட்டு, அவர் ஜாம் ஜாம் என்று இறங்கிப்போனார். வண்டியிலிருந்த வீரர்களில் பத்துப்பேர் இறங்கி டிபன் சாப்பிடப்போயிருந்தார்கள். நானும் அந்த இருவரும் தான் பெட்டியிலே இருவருள் ஒரு வீரன் "அட, நம்மை இங்கே சென்ட்ரி வச்சூட்டு போறாருடா!" என்று முணுமுணுத்தான் தமிழிலே - அவருடைய உருவம் மறைந்த பின்னர்!

"ராணுவ உடையிலிருந்தவர்களை - ராணுவத்தில் சிறிதும் சம்பந்தப்படாத அந்த ஆஜானுபாகுவான மனிதர் எப்படி ஆட்சி புரிகிறார்! அவருடைய தோற்றமும், தோரணையும் அல்லவா இங்கே மேலோங்குகிறது!" என்று நான் என் புது நண்பர் பால் மிகவும் மதிப்பை உயர்த்தினேன்!..... ஆனால், அன்று

பிற்பகல், அந்த மனிதர், அன்னாசிப் பழத்தோலைப் பட்டை பட்டையாகச் சீவி காலடியில் போட்டபொழுது என் மதிப்பு சப்பிட்டுவிட்டது. ஏதோ நல்லகாலம் அவருக்கு - எல்லாருக்கும் ஜோரான அன்னாசித்துண்டம் கொடுத்தார் - என் மன்னிப்புக் கிடைத்தது!"

"தேவலையே மாமா நீங்கள்" என்ற சபாஷ் கொட்டினான் ராஜு.

பாமா தன் அனுபவங்களைப் புகலத் தொடங்கினாள்!

"போன வருஷம் என் அகத்துக்காரரும் நானும் சென்னை போனோம்! மெட்ராஸ் போக நிச்சயமானதுமே, நான், புடவைக்குத் தகுந்த ரவிக்கை, ரவிக்கைக்குத் தகுந்த செருப்பு, காலையில் இன்ன டிரஸ், வெயில் வேளையில் இன்ன புடவை என்று யோசனைகளில் இறங்கினேன். மெட்ராஸ் தெருக்களில் உலாவுவதென்றாலே எனக்குக் குஷி - அதுவும் பதினைந்து நாள் குஷாலாக பாட்டுக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி எல்லாம் பார்க்கவென்று போகும் சமயம் மனதில் எத்தனை கற்பனைகள் இருக்கும்? மெட்ராஸில், வயசானவர்கள்கூடக் கையில் 'ஹாண்டுபாக்' இல்லாமல் புறப்படுவதில்லை. ஆனால், எனக்கு 'ஹாண்டு பாக்' வைத்துக் கொண்டு நடக்க மட்டும் தெரியவில்லை. அதுதான் சொல்கிறேனே - நாகரீகமாக இருக்க ஆசை, ஆனால் கூச்சம் இரண்டுங்கெட்டான்தான் நான்!

மெட்ராஸிலிருந்த பொழுது என் சிநேகிதி கடிதம் போட்டாள் - தாமிரத் தோண்டி வேண்டுமென்று. அவளிடம் சொல்லி எத்தனையோ சாமான் நாங்கள் வரவழைத்ததுண்டு - இதை எப்படி நாங்கள் மறுப்போம்? வாங்கியாச்சு -எடுத்துக்கொண்டு கிளம்பினேன்! நல்லவேளை கடைக்காரன் பாலிஷ் கொடுத்து இருந்தான் - அதனால் குடத்தைக் கையில் பிடித்துக்கொண்டு நடந்தேன். இடுப்பில் வைத்துக்கொள்ள வெட்கம். இடதும் வலதுமாகக் கைமாற்றி அதைப் பிடித்துக்கொண்டேன். பதினெட்டு முழப்புடவைக்கு கையில் குடம் பாந்தமாயிருக்கலாம்! என் 'ஹீல்ஷுவுக்கும் காலர் ரவிக்கைக்கும் நினான் புடவைக்கும் பொருந்துமா? சாயங்காலவேளை - ஏகக் வட்டம் எங்கு பார்த்தாலும் பஸ்ஸில் இடமில்லாமல் பஸ் ஸ்டாப்புகளில் காத்தோம் எல்லோர் பார்வையும் என் கைக்குடத்தின் மேலும் என் மேலும் தான்! எனக்கு அழுகை வந்தது சிரிப்பாக மாற்றிக்கொண்டிருந்தேன். "கையில் ஹாண்டுபாக் சகிதம் நடமாட வேண்டிய மதாரஸில் இந்த கதியா?" என்று இவரிடம் சொல்லிக்கொண்டு நின்றேன். "நான் கதாநாயகி நீங்கள் வில்லன்!" என்று என்லோரும் நினைப்பார்கள் என்று சொன்னேன். 'வில்லனா?' என்று சிரிப்போடு முறைத்தார் இவர் "நான் தைரியமாக, குடம் தூக்கிக்கொண்டு அலையக் கூசாதவளாக இருக்கிறேன் - என்னை மெச்சவேண்டும் எல்லோரும்!" என்று சமாதானம் செய்து கொண்டு தவித்தேன். கடைசியில் பஸ்ஸில் இடம் கிடைத்தது. ஏறினோம். யாரோ ஒருவர் உட்கார இடமளித்தார்? - உட்கார்ந்தேன். "இப்பொழுதெல்லாம் பெண்கள் உட்கார இடமளிப்பதில்லை, ஆனால், குடத்தைப் பார்த்து இடம் கிடைத்தது போ! 'ஹாண்டு பாக்' இருந்தால் கிடைத்திருக்காது இடம்!" என்றார் இவர்! எனக்கு மட்டும் இப்பொழுது நினைத்தால் கூட அந்த இனுபவம் கசக்கிறது! எந்த எழுத்தாளன் என்னைப் பற்றி எழுதிவிடுவானோ என்று பயமாயிருக்கிறது! மெட்ராஸ் ரேடியோவில் சான்ஸ் கிடைத்து ஜம்மென்று வீணையை எடுத்துக் கொண்டு போகும்படி இருந்திருக்கக் கூடாதா? என் ராசி போலிருக்கு, குடமும் கையுமா அலைந்த நாலாம் நாள் ஒரு பழைய பிடிலை ஒரு சிநேகிதர் வீட்டில் சேர்ப்பிக்கும்படியாயிற்று! "பிடில் தானே, நீங்களாயிற்று! என்று இவளிடம் ஒப்பித்தேன். டிராமில் ஏற வேண்டும் - ஒரே கூட்டம். எனக்கு, டிராமின் முன்புறம், நட்டநடுவில், டிராம் ஓட்டிக்குப் பக்கத்தில் இடம் கிடைத்தது. இவர் எங்கேயோ தொத்திக் கொண்டார் - பிடில் பெட்டி, என்னிடம் வந்தது. அந்தக் கிழிசற் பெட்டியுடன் ஊர்வலத்திற்கு நிற்பது போல நின்றேன். தெருவில் போகும் அத்தனை பேருடைய பார்வைக்கும் இலக்காக சிகப்புப் புடவையுடுத்திய நான் நின்றேன். யாராவது வழிவிடமாட்டார்களா, டிராமின் உட்புறம் போய்விட மாட்டோமா என்று ஏங்கினேன்!

ரயில் அனுபவமும் ஒன்று இருக்கு. 'ரயில்வே பாஸ்' உள்ள ஒரு குடும்பத்தோடு நான் போனேன். எனக்கு டிக்கெட் அவசியமில்லை - என்றார்கள். அந்தக் குடும்பத்தில் மூத்த பெண்ணும் நானும் ஒரு 'பாஸி'ல் போகிறதாகவும் அந்தக் குடும்பத்தின் மீதி பேர் வேறு பாஸில் போகிறதாகவும் ஏற்பாடு. எங்கள் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் எங்களைத் தவிர இரண்டே பேர். அவர்கள் எங்களைப் பற்றி விசாரித்தபொழுது, என்னை அழைத்துப் போகும் அம்மாள் தன் மூத்த பெண்ணையும் என்னையும் வேறு

ஒரு குடித்தனக்காரர்களாகப் பிரித்துச் சொன்னபோது தான் எனக்கே இந்த ஏற்பாடு விளங்கியது! சிறிது நேரங்கழித்து, அந்த அம்மாளின் கடைசிப் பையன் தூக்கத்திலிருந்து விழித்தான்! "அக்கா! அக்கா!" வென்று தாவினான். அந்த அம்மாள் கலக்கமுடன் தன் மகளைப் பார்த்து, "சற்று வைத்துக் கொள்ளுங்களம்மா - உங்களிடம் வரணுமென்று அழுகிறான்!" என்று மகனை மகளிடம் கொடுத்தாள். அக்காள்தான் தம்பிக்குப் பால் புகட்டுவாளாம் எப்பொழுதும்! அதனாலும் சற்று சங்கடம் உண்டாயிற்று! என்னையும் நோக்கி அந்த அம்மாள் "உங்களிடம் தான் அதற்கு ஒட்டுதல் - உங்களகத்திலேயே தானே எப்பொழுதும் வாசம் இது!" என்றார். அந்தப் பேச்சிற்கு மதிப்புக் கொடுக்கணும் என்று நான், "என்னிடம் வாப்பா," என்று குழந்தையை அழைத்துக் கை நீட்டினேன். குழந்தை 'ஓ'வென கதறத் தொடங்கிவிட்டது! அக்காவிற்கும் தம்பிக்கும் முகம் ஒரே சாயல் - குழந்தையும் அவளிடமே போகிறான்! இந்த அம்மாளோ தவிக்கிறாள்! நானும் அவர்களுடனே பயணம் செய்ததால்தானே இந்த அவதி அந்த அம்மாளுக்கு என்று எனக்கு ஒரே வேதனை! " தலையைவலிக்கிறது!" என்று படுத்துவிட்டேன். என்னை அந்தப் புது மனிதர்கள் ஏதாவது கேட்க, நான் ஏதாவது உளறி கொட்டிவிட்டால்? உதவி செய்ய வந்த குடும்பத்திற்கு எப்படியிருக்கும்? இப்படித்தான், அந்தப் பயணம் முழுதும் நானும் அவதிப்பட்டேன்.

"ஒரு தடவை பஸ்ஸில் மூன்றுபேரும் உட்காரும் சீட்டில் இரண்டு பெண்கள் மத்தியில் உட்கார்ந்திருந்தேன். இவர் முதலில் நின்றார், பிறகு மெல்ல மெல்ல நகர்ந்துபோய் முன்னாடி சீட்டில் உட்கார்ந்துவிட்டார். அதற்குப் பிறகு என் வலது பக்கத்திலிருந்த பெண் இறங்கிப் போய்விட்டாள். இடம் காலி - வலது பக்கம். கதவுக்குச் சமீபம் காலி இடம் இருந்தும், ஏறியவர்கள் யாரும் அதிலே உட்காரவில்லை. இரண்டு பெண்களுக்குப் பக்கத்தில் காலி இடமிருந்தும் அது பிரயோஜனமில்லையே என்று அவர்கள் எண்ணியிருப்பார்கள்! இந்த நிலைமை எனக்கும் கஷ்டமாயிருந்தது - அப்பொழுது ஒருவர், முப்பது வயதுதான் இருக்கும், இரண்டு பை நிறைய சாமான்களுடன் ஏறினார் - பாவம், வண்டியின் ஓட்டத்திலே ஆடி அசைந்து கொண்டே, டிக்கட்டுக்குச் சில்லரை எடுக்க முயன்றுகொண்டிருந்தார். இவர் அந்தக் கோடி, நான் இந்த மூலை, பக்கத்தில் நின்று தவிக்கும் புது மனிதரை "உட்காருங்கள்" என்று சொல்லவும் கூசினேன். ஆகவே, என் இடத்திலிருக்கும் பெண்ணோடு உராய்ந்து, தலைப்பையெல்லாம் இழுத்துச் சொருகிக்கொண்டு ஒடுங்கி உட்கார்ந்தேன். எனக்கு ஆக்ஷேபனை இல்லை என்று கண்ட அந்த மனிதர், பேராவலுடன் "உட்காரட்டுமா நான்?" என்று கேட்கும்பொழுதே, நான் தலையை அசைத்துவிட்டேன் - நான் தலையை அசைக்கும் பொழுதே அவர் பாவம் 'தொப்' பென்று உட்கார்ந்துவிட்டார்! அந்தச் சமயம் எனக்கு அதைத் தவிர வேறு வழி தோன்றவேயில்லை! "தவறில்லை - இது போல நெருக்கடியில்!" என்று எண்ணி மனமாறினேன். இறங்கிய பிறகு இவர் "அதுதான் சரி!" என்று சொல்லிவிடவே, எனக்கு பெருமையாகக்கூட இருந்தது! இப்பொழுதுதான், "அந்தத் துணிபு வந்ததா?" என்று பயமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது! நான் மெட்ராஸில் இருந்ததே கொஞ்சநாள்! அதற்குள்ளே இத்தனை அனுபவங்கள்! நான் மட்டும் மெட்ராஸிலேயே இருந்தேனோ கொள்ளையாய் கதையும் நாவலும் எழுதிவிடுவேன்!" என்று பாமா உற்சாகமுடன் கூறி முடித்தாள்.

***********

((சுதேசமித்திரன், அக்டோபர் 30, 1951)